# சபாவு சியாரோங் (Jiarong, Chabao)




**Population:**
14,170 (2000)
17,450 (2010)
21,500 (2020)
**Countries:** China
**Buddhism:** Tibetan
**Christians:** none known

## மேலோட்டம்:

**மற்ற பெயர்கள்:** Gyarong, Gyarung, Rgyarong, Chiarong, Jarong, Chabao, Northeastern Jiarong, Northern Jiarong

**மக்கள்தொகை:** 12,197 in China (1993, Lin Xiangron)

**மொழிப்பிரிவு:** சீன-திபெத்திய, திபெத்திய-பர்மிய, தன்குத்-ஷியாங், சியாரோங் மொழி

**மொழி வழக்குகள்:** 0

**திபெத்திய புத்தமதம்:** 90%

**கிறிஸ்துவம்:** 0%

**வேதாகமம்:** இல்லை

**இயேசு திரைப்படம்:** இல்லை

**சுவிசேஷ ஒலிப்பதிவுகள்:** இல்லை

**கிறிஸ்தவ அலைபரப்புகள்:** இல்லை

ROPAL **குறியீடு** : JYA

### கிறிஸ்துவத்தின் நிலை




- சுவிசேஷத்தைக் கேட்டிராதவர்கள்
- சுவிசேஷத்தைக் கேட்டும் இரட்சிக்கப்படாதவர்கள்
- ஏதாவது ஒரு கிறிஸ்துவப் பிரிவைப் பின்பற்றுபவர்கள்

**வசிப்பிடம்:** சுமார் 15,000 சபாவு சியாரோங் மொழி பேசும் மக்கள் மேற்குச் சீனாவின் வடமேற்கு சிசுவான் மாநிலத்தில் வசிக்கின்றனர். இவர்கள் முக்கியமாகச் சபாவுப் பிரதேசத்தின் லொங்கர்சியா (Longerjia), தாசங் (Dazang) மற்றும் ஷயர்ஷோங்(Shaerzong) பட்டணங்களில் அடர்த்தியாகக் காணப்படுகின்றனர். சபாவு தாலுகா ஏபா மாகாணத்தின் பர்கம் (Barkam) மாவட்டத்தில் உள்ளது. பர்கம் உள்ளூர் சியாரோங் மக்கள் மற்றும் திபெத்தியர்களால் மயர்கங் (Ma'er-kang) எனப்படுகிறது. ஒரு ஆவணம் இவ்வாறு கூறுகிறது "பர்கம் பட்டணம் திபெத்தியர்கள், சியாரோங்க்கள் மற்றும் சீனர்களால் ஆன ஒரு கலப்படமான ஜனத்தொகையைக் கொண்டுள்ளது. சீனர்கள் மலைப்பிரதேசமான இப்பகுதியை இணைக்கச் சாலை அமைத்த பிறகு இப்பகுதியிலுள்ள முக்கியமான ஒரு புத்த மடம் இருக்கிற இடத்தில், கி.பி.1950 ல் இந்தப் பட்டணம் கட்டப்பட்டது." சபாவு சியாரோங் மக்களின் ஜனத்தொகையே இம்மாவட்டத்தில் அதிகமாக உள்ளது.

**அடையாளம்:** சபாவு சியாரோங் மக்கள் அதிகாரப்பூர்வமாகத் திபெத்தியர்களின் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

**மொழி:** சபாவு சியாரோங் மொழி திபெத்திய-பர்மிய மொழிப் பிரிவின் ஷியங் கிளையைச் சேர்ந்ததாகும். இம்மொழியை மற்ற சியாரோங் மொழி பேசுபவர்களால் புரிந்துகொள்ள முடியாது. சபாவு சியாரோங் மக்கள் மற்ற சியாரோங் மக்களைக் காட்டிலும் அதிகமாகத் திபெத்தியர்களுடைய ஆதிக்கத்திற்கு உட்பட்டுள்ளனர். பெரும்பாலானோர் உள்ளூர் கம் மொழியையும் பேசக்கூடியவர்கள். ஆண்களுடைய எழுத்தறிவு விகிதம் 27% ஆகும். அநேக மேற்கத்திய அறிஞர்கள் (சில சீன அறிஞர்களும் கூட) சியாரோங் ஒரு தனிப்பட்ட மொழி எனக் கருதுகின்றனர்; மற்றவர்கள் இதைத் திபெத்திய மொழியின் ஒரு வட்டார மொழி வழக்கு மட்டுமே எனக் கருதுகின்றனர்.

**வரலாறு:** சியாரோங் ஜனத்தொகை வியாதிகள் மற்றும் யுத்தங்கள் காரணமாக நூற்றாண்டுகளாகக் குறைவான நிலையிலே உள்ளது. கி.பி.1930 களில் இவ்வாறு எழுதப்பட்டது "பழங்குடியினர் (ஆதிவாசிகள்) இங்கு வரும் அந்நிய தேசத்தாரைப் பிடித்துக் கொன்றுவிடுகின்றனர். ஷீகாங்கின் பகுதிகளில் கொள்ளையின் நிமித்தம் கைவிடப்பட்ட குடிசைகள் மற்றும் தரிசுநிலங்களைப் பார்ப்பது சாதாரணமானக் காட்சியாகும். சமுதாயங்களின்மேல் பழங்குடியினரின் கொடூரமான தாக்குதல் மற்றும் அதற்குப் பதில் கொடுக்கும் அரசாங்கத்தின் தண்டனைகளால் பத்தாயிரக்கணக்கான உயிர்கள் அழிந்தன"

**பழக்கவழக்கங்கள்:** இவர்கள் பர்கம்பட்டணத்தின் கடுமையான குளிரில் நூற்றாண்டுகளாக வாழ்ந்துவந்திருக்கின்றனர். சில பழ வகைகள் அல்லது காய்கறிகள் மட்டுமே இங்கே விளைகின்றன. இவர்களுடைய மிக முக்கியச் சாகுபடி வாற்கோதுமை ஆகும். சபாவு சியாரோங் மக்களின் உணவுப் பழக்கத்தில் முக்கியமானவை கொழுப்பு, மாமிசம் மற்றும் புளிப்பான தயிர் ஆகும். வடபகுதிகளில் குளிர்காலம், கடுமையான பனியையும் பூஜ்யத்திற்குக் கீழான வெப்பநிலையும் கொண்டுவருகின்றது. சியாரோங் பெண்கள் கையால் பின்னப்பட்ட கச்சை, தலைப்பாகை மற்றும் இவர்களுக்கே உரித்தான தனித்தன்மையான மேலாடையையும் அணிகின்றனர். ஆண்கள் பாரம்பரியமான திபெத்திய மேலங்கியை அணிகின்றனர். பெரும்பாலானப் பகுதிகளில், ஓடும் தண்ணீர், மின்சாரம் மற்றும் தொலைப்பேசி கிடையாது.




**மதம்:** சுமார் 10 சதவீத சியாரோங் மக்கள் பொன் மதத்தைப் பின்பற்றுகின்றனர். புத்தமதம் 7 ஆம் நூற்றாண்டில் இந்தியாவிலிருந்து வருவதற்குமுன் ஆவி வழிபாடு மற்றும் சூனியத்தை ஆதாரமாகக் கொண்ட பொன் மதமே எல்லாத் திபெத்தியர்களின் மதமாக இருந்தது. புத்தமதம் வழக்கத்திலிருந்த பொன் மதச் சடங்குகளோடு இணைக்கப்பட்டது.

**கிறிஸ்துவம்:** அறியப்பட்ட விசுவாசிகள் இவர்கள் மத்தியில் இல்லை. ஐந்து சியாரோங் மொழி பேசும் மக்கள் பிரிவுகளில் வெறும் இரண்டு அறியப்பட்ட விசுவாசிகள் மட்டுமே உள்ளனர். இம்மக்கள் சீனாவின் தொலைதூரப் பகுதிகளில் நூற்றாண்டுகளாகத் தேவனண்டைச் சேரும் வழியைக்காட்டச் சுவிசேஷ ஒளி இல்லாத நிலையில் வாழ்ந்து அழிந்துகொண்டிருக்கும் சந்திக்கப்படாதவர்களாவார்கள்.